கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014
(யூலை/ஆகஸ்ட் 2015)

# EDUS 4102 ஒப்பீட்டுக்கல்வி
# Comparative Education

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) ஒப்பீட்டுக் கல்வியைப் பெறும் முறைகளுள் அளவு ரீதியான புள்ளிவிபர முறையானது பெறும் முக்கியத்துவத்தை விமர்சன ரீதியாக ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) கல்வி தனியார் மயப்படுத்தப்படுவதனால் ஏற்படும் பிரச்சினைகளை இந்தியாவை முன்னுதாரணமாகக்கொண்டு ஆராய்க.
(15 புள்ளிகள்)

02.(அ) ஐரோப்பிய நாடுகளின் கல்வி முறைகளில் பல்சமய, பல்கலாசாரக் கல்விக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்க.
(12 புள்ளிகள்)

(ஆ) “இன்று ஒரு நாட்டின் கல்வி முறையில் தொழிற்கல்வியானது பாரிய செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது.” இக்கூற்றினை சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் தற்கால கல்வி முறையினை அடிப்படையாகக்கொண்டு ஆராய்க.
(13 புள்ளிகள்)

03.(அ) இலங்கையில் மன்னராட்சிக் காலத்தில் காணப்பட்ட உள்நாட்டுக் கல்வியின் சிறப்பம்சங்களைப் பொருத்தமான சான்றாதாரங்களை முன்வைத்து விளக்குக.
(13 புள்ளிகள்)

(ஆ) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய பின்வரும் குழுக்களின் கல்விப் பணிகள் எவ்வாறு பிற்கால கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தது என்பதை விளக்குக.

1. பிரான்சிஸ்கன் குழு
2. ஜெசுவிற் குழு
3. அகஸ்டியன் குழு
4. டொமினிக்கன் குழு

(12 புள்ளிகள்)

04.(அ) ஒல்லாந்தர் ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில் காணப்பட்ட பாடசா ஒழுங்கமைப்புக்களைக் குறிப்பிடுவதுடன் இவ் ஒழுங்கமைப்புக்க பாடசாலை ஆணைக்குழுவானது ஏற்படுத்திய மாற்றங்களைப் பரிசீல செய்க.

(12 புள்ளி

(ஆ) கோல்புறூக் ஆணைக்குழுவானது இலங்கையில் கல்வி புனரமை தொடர்பாக முன்வைத்த ஆலோசனைகள் எவ்வாறு அக்கால அரசி பொருளாதார, முறைகளில் செல்வாக்குச் செலுத்தின என்பதை ஆராய்க

(13 புள்ளி

05.(அ) 1931–1947 வரையான காலப்பகுதியில் இலங்கையில் கல்வி வாய்ப்பு விரிவாக்கப்பட்டமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளி

(ஆ) J.E.ஜெயசூரிய தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழு வெளியிடப்பட்ட அறிக்கை சிபார்சுகள் சுதந்திரத்தின் பின்ன இலங்கையின் கல்வி வரலாற்றில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத் என்பதை மதிப்பீடு செய்க.

(15 புள்ளி

06.(அ) இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் கல்வி ஜனநாயகப்படுத்தப்படுவத இலவசக் கல்வி, மற்றும் கற்பித்தலில் உள்நாட்டு மொழிப் பிரயோ என்பன எவ்வாறு பங்களிப்புச் செய்தன என்பதைப் பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளி

(ஆ) 1997 – 2003 வரையான காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கல் சீர்திருத்தங்களில் கனிஷ்ட இடைநிலைக் கல்வி தொடர் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

(13 புள்ளி

*****